# <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| O.S. No. 82/2013 | Date : 06.02.2024 | PW1 |
|---|---|---|
| Name: வேல்முருகன் | S/o. மாணிக்கம் | |
| Evidence Recorded Time: 3.15. P.M. to 4.45 P.M | | |

**<u>4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். மேற்படி வழக்கு எதுக்காக போட்டுள்ளேன் என்று தெரியுமா என்றால் தெரியும். பணம் கொடுத்தேன் நிலத்தை கிரையம் செய்து தரவேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் அனைவரும் எனக்கு சின்ன வயதில் இருந்தே தெரியும் என்றால் தெரியும். பக்கத்து ஊர் காரர்கள். வெங்கடாஜலகம் என்பவர் 4ம் பிரதிவாதி ராஜகுமாரியின் சொந்த அத்தை மகன் என்றால் எனக்கு தெரியாது. நான் எமரால்டு வெங்கடாஜலத்தின் ஒன்றுவிட்ட அக்கா மகன் என்றால் இல்லை. எனக்கும் அவருக்கும் சம்மந்தம் இல்லை. தாவா அக்ரிமெண்ட்டை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். தாவா சொத்தின் ச.எண். என்ன என்றால் 112/1 ஆகும். 112/1ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. நான் வாங்கியது தான் தெரியும். சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும். தாவா அக்ரிமெண்ட் தேதி 03.06.2012 சாட்சியின் கையில் எழுதி இருந்ததை பார்த்து சொல்கிறார். அக்ரிமெண்ட் சமயத்தில் தாவா சொத்து சதுர அடி சுமாராக எவ்வளவு போகும் என்றால் தெரியாது. மொத்த ரேட் பேசி வாங்கினேன். அந்த சமயத்தில் சதுரஅடி ரூ.400 முதல் 450 வரை இருந்தது என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்தை பொருத்து நான் ஏதாவது வில்லங்க சான்று எடுத்துப் பார்த்தேனா என்றால் அக்ரிமெண்ட் போடும் முன்பு பார்த்தேன். வில்லங்க சான்ற எவ்வளவு வருடத்திற்கு போட்டு பார்த்தேன் என்றால் எத்தனை வருடம் என்று ஞாபகமில்லை. அதை கோர்ட்டில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. 10-12 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நாட்கள் ஆகிவிட்டதால் அதை கொடுத்தேனா என்று நினைவில்லை. சாட்சி தற்போது கொடுக்கவில்லை என்று கூறுகிறார். நான் வில்லங்க சான்று போட்டு பார்த்த விபரத்தை என் வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிராதிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா தாக்கல் செய்வதற்கு 2 அல்லது 3 மாதத்திற்கு முன்பு தாவா அக்ரிமெண்ட் எழுதப்பட்டதா என்றால் இல்லை ஒரு வருடத்திற்கு முன்பு எழுதப்பட்டது. எவ்வளவு ரூபாய் முத்திரை தாளில் எழுதப்பட்டது என்றால் தெரியும் நினைவில்லை. பணம் கொடுத்தேன் எத்தனை ரூபாய் பத்திரத்தில் எழுதினார்கள் என்று தெரியாது. பத்திரம் வாங்கப்பட்ட தேதிக்கு எத்தனை நாட்கள் பின்னால்

அக்ரிமெண்ட் எழுதப்பட்டது என்றால் தெரியாது. நான் 1000 ரூபாயை முத்திரை விற்பனையாளரிடம் கொடுத்தேன். அவர் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. விலை யாரிடம் பேசினேன் என்றால் எமரால்டு வெங்கடாஜலகம் மற்றும் அவரது மனைவி ஜெய்சிரானியிடம் பேசினேன். அவர்கள் எவ்வளவு சொன்னார்கள் என்றால் 7–8 லட்சம் விலைபேசினார்கள். நான் 6 லட்சத்திற்கு விலை பேசினேன். புரோக்கர் யார் என்றால் யாருமில்லை. நில உரிமையாளர் ரங்கநாதன் இருந்தார். அக்ரிமெண்ட் போடுவதற்கு எவ்வளவு நாட்கள் முன்னால் சொத்துக்க்ளுக்கு விலை பேசினோம் என்றால் இரண்டு மாதம் முன்பு பேசினோம். விலைபேசியபோது எவ்வளவு அட்வான்ஸ் கொடுத்தேன் என்றால் 6 லட்சத்திற்கு விலைபேசி அதற்கு அடுத்த நாள் 5 1/2 லட்சம் அட்வான்ஸ் கொடுத்து கிரைய ஒப்பந்தம் போட்டுக் கொண்டோம். மேற்படி தொகையை உரிமையாளர் ரங்கநாதன் அங்கு இருக்கும் போது ரங்கநாதனிடம் கொடுத்தேனா என்றால் ரங்கநாதன் சொல்லி எமரால்டு வெங்கடாஜலத்திடம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்து அக்ரிமெண்ட் எழுதும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் நான், 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் இரண்டு சாட்சிகள் இருந்தார்கள். சாட்சிகளை நான் தான் கூட்டிச் சென்றேன். எங்கு எழுதியது என்றால் மேட்டுர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பக்கத்தில் பத்திரம் எழுதும் நபர் தட்டச்சு செய்து கொண்டு வந்தார். பத்திர அலுவலகம் கீழே தட்டச்சு செய்பவர் அலவலகம் என்று சொன்னால் 6 கடைகள் உள்ளது அதில் ஒரு கடைதான். எமரால்டு வெங்கடாஜலகம் வீட்டில் கையெழுத்து போடும் போது காலை 9–9.30 மணி இருக்கும்.2012–ல் எனக்கு எந்த எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் கேவிபி வங்கி, எச்டிஎப்சி ஆகிய வங்கிகளில் கணக்கு இருந்தது. எந்த வங்கியில் இருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தேன் என்றால் வங்கியில் இருந்து எடுக்கவில்லை. வீட்டில் இருந்து எடுத்துக் கொடுத்தேன். எனக்கு என்ன தொழில் என்றால் சிவில் காண்ட்ராக்ட்ர். நான் செய்த தொழிலை என் பிராதிலோ, பிரமாண பத்திரத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சிவில் காண்ட்ராக்டர் என்பதற்கு ஆதாரம் ஒப்படைக்க முடியுமா என்றால் முடியும். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. 5 1/2 பணத்தை மனைவியின் நகைகளை சொசைட்டியில் அடமானம் வைத்து கொடுத்தேன். எப்போது அடமானம் வைத்தேன் என்றால் அக்ரிமெண்ட் போடுவதற்கு ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் முன்பு அடமானம் வைத்தேன். எவ்வளவு நகை வைத்தேன் என்றால் 30 பவுன் அடமானம் வைத்தேன். எந்த வங்கியில் வைத்தேன் என்றால் டிசிஎம் தொழிலாளர் கூட்டுறவு வங்கி கோனூர், தொடக்க வேளாண்மை வங்கி, பொட்டனேரி, முத்தூர் பைனான்ஸ், கொசமட்டம் பைனான்ஸ ஆகியவற்றில் நகைகளை அடமானம் வைத்தேன். எந்த எந்த வங்கியில் எவ்வளவு பவுன் அடமானம் வைத்தேன் என்றால் வைத்தது தான் தெரியும் எவ்வளவு என்று தெரியாது. நான் பவுன் அடமானம் வைத்து பணம் கொடுத்ததை என் பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில சொல்லியுள்ளேனா

என்றால் இல்லை. அடமானம் வைத்தற்கு ஆவணங்களை கோர்டில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் நகையை திருப்பும் போது ரசீது பெற்றுக் கொண்டு நகைகளை திருப்பி கொடுத்துவிடுவார்கள். ஆவணங்கள் இல்லை. அடமானம் வைத்ததை ஒரு வருடத்திலேயே திருப்பி விட்டேன். தொழிலுக்காக மீண்டும் வைத்து மீண்டும் கடன் வாங்குவேன். 2012–ல் தாவா அக்ரிமெண்ட் சமயத்தில் என் பெயரில் ஏதாவது சொத்துஇருந்ததா என்றால் இல்லை. 2012–ல் என் வங்கி கணக்குகளில் 25 ஆயிரம் முதல 50 ஆயிரம் வரை பணம் இருந்ததா என்றால் அப்போது இல்லை. நான் கான்ட்ராக்ட் தொழில் செய்து எனக்கு அனுபவம் உள்ளது. ஏதாவது சொத்திற்கு அக்ரிமெண்ட் போட்டால் அதை பதிவு செய்யவேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா அக்ரிமெண்ட்யை பதிவு செய்ய நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் இல்லை. உரிமையாளர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் பதிவு செய்யவில்லை. எமரால்டு வெங்கடாஜலம் என்பவர் அதிமுக கட்சியில் நங்கவள்ளி ஒன்றிய செயலாளராக பொறுப்பில் இருந்தார் என்றால் சரிதான். நான் நங்கவள்ளி ஒன்றிய மாணவரணி செயலாளர் என்றால் சரிதான். எனக்கு கட்சி பொறுப்பு தவிர வேறு தொழில் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு 5 1/2 லட்சம் கொடுக்க தகுதி இல்லை என்றால் சரியல்ல. நான் காண்ட்ராக்டர் தொழில் செய்து வருகிறேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 3 முதல் 6 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர் வழக்குரை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எமரால்டு வெங்கடாஜலம், ஜெய்சிராணி தாக்கல் செய்த சங்கதிகள் அவர்கள் தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு தெரியும் என்றால் தெரியாது. நான் கோர்டுக்கு வரும்போதெல்லாம் எமரால்டு வெங்கடாஜலம் அழைத்து வருவார் என்றால் இல்லை நான் என் காரில் வருவேன். தாவா அக்ரிமெண்ட்டில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் ராஜேந்திரன் மற்றும் இளங்கோவன் ஆகியோர் கையொப்பம் செய்தார்கள். சாட்சி கையெழுத்து போடும் போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். சாட்சி கையெழுததை போட்டு ராஜேந்திரன் தனது முகவரியை அவரே எழுதினாரா என்றால் எனக்கு தெரியாது. இளங்கோ அதிமுக கட்சியயில் ஒரு பிரமுகரா என்றால் தற்போது தான் உள்ளார். முன்பு இல்லை. அவர் கட்சியில் இருந்தவர் என்றும் அதைப்பற்றி எனக்கு தெரியும் என்றும் வேண்டபப்பட்டவர் என்பதால்மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜேந்திரன் தான் கட்சியில் இருந்தார். பொதுஅதிகார ஆவணம் எந்த எந்த சொத்துக்களைப் பொருத்து ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று எனக்கு தெரியுமா என்றால் நான் வாங்கிய சொத்துக்கான பவர் அதுதான். தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்களுக்கு அந்த பவர் உள்ளதா என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அக்ரிமெண்ட் எழுதப்பட்ட தேதியில் மேற்படி பொது அதிகாரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் கேன்சல் ஆகிவிட்டது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல. எனக்கு

தெரியும் என்று சொன்னால் தெரியும். கோனுர் கிராமமும், வீரக்கல்புதூர் கிராமமும் ஒட்டி அமைந்துள்ள கிராமம் என்றால் சரிதான். 3 முதல் 6 பிரதிவாதிகளின் சொத்துக்கள் இரண்டு கிராமத்திலும் ஒரே சதுர அளவில் அமைந்துள்ளது என்றால் அது பற்றி எனக்க தெரியாது. குஞ்சாண்டியூர் ராஜு மகன் ஜெயக்குமார், ராமன் நகர் நல்லுசாமி மகன் அழகுமயில்சாமி, கந்தனூர் சண்முகம் மனைவி மல்லிகா, கந்தனூர் ரத்தினம் மகன் சதீஸ்குமார், மங்காளூர் ரத்தினம் மகன் குமார், கோனூர் பச்சமுத்து மகன் அம்மாசி, மானிக்கம் மகன் இன்பமணி ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நபர்கள் 3 முதல் 6 பிரதிவாதிகளிடம் இருந்து நேரடியாக கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அவர்கள் அனைவரும் எமரால்டு வெங்கடாஜலம், அவரது மனைவியிடம் இருந்து கிரயம் வாங்கினார்கள். ரத்தினம் மகன் குமார் என்பவர் பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். அந்த நிலத்தை நான் தான் வாங்கி கொடுத்தேன். மேற்படி கிரயங்கள் எல்லாம் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு உறுதுணையாக 1 முதல் 2 பிரதிவாதிகள் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். பவர் கொடுத்தன் அடிப்படையில் தான் விற்பனை செய்தார்கள். பவர் கொடுத்ததன் அடிப்படையில் விற்பனை செய்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி ரங்கநாதன் என்பவர் மேட்டுர் கெம்பிளாஸ்டில் பணியாற்றி இருந்தார் என்றால் சரிதான். அவர் பிளாண்ட் ஆப்ரேட்டராக இருந்த விவரம் எனக்கு தெரியாது. அவர் கெம்பிளாஸ்ட் சன்மார்க் ஹவுசிங் சொசைட்டியில் தலைவராக சில வருடங்கள் பொறுப்பில் இருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. ஹவுசிங்க சொசைட்டி இடம் வாங்கியது சம்மந்தமாக ரங்கநாதன் மற்றும் மற்ற சிலருக்கும் பிரச்சினை ஏற்பட்டு வந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது.அந்த சமயத்தில் 1ம் பிரதிவாதி , 4ம் பிரதிவாதியின் அத்தை மகன் என்பதால் மேற்படி பிரச்சினையை சுமூகமாக தீர்த்து வைப்பதாக சொன்னது எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பிரச்சினையை தீர்க்க வெங்கடாஜலம் 6 லட்சம் வரை செலவாகும் என்று சொன்ன விவரமும் எனக்க நேரடியாக தெரியும் என்றால் தெரியாது. வெங்கடாஜலம் தனக்கு பாத்தியப்பட்ட நிலங்களை விற்பனை செய்து உதவி செய்வதாக சொன்ன விவரம் எனக்கு நேரில் தெரியும் என்றால் தெரியாது. வெங்கடாஜலத்திற்கு 2 லட்சம் கொடுத்து மீதி 4 லட்சம் கொடுப்பதற்காக செயூரிட்டிக்காத்தான் மேற்படி பவர் பத்திரம் எழுதப்பட்டது என்று எனக்கு நேரில் தெரியும் என்றால் தெரியாது. அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை. 1, 2 பிரதிவாதிகள் நம்பிக்கையின் பேரில் கொடுக்கப்பட்ட பவரை துர்பிரயோகம் செய்து மோசடி பத்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்றும் அந்த விவரமும் எனக்க நேரடியாக தெரியும் என்றால் அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை. அதை பற்றி கேட்டபோது உறுப்பினர்களுக்கு அதிக செலவு ஆகிவிட்டது என்றாலும் 4ம் பிரதிவாதிக்கு உறவினர் என்ற அடிப்படையிலும்

எந்தவிதமான குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற விவரமும் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் அப்படி எதுவும் கிடையாது. மேற்படி பவர் பத்திரத்தை பயன் படுத்தி துஷ்பிரயோகம் செய்வதற்காகத்தான் 08.01.2013 அன்று தகவல் கொடுத்து அந்த பவர் பத்திரத்தை ரத்து செய்த விவரமும் எனக்கு நேரில் தெரியும் என்றால் தெரியாது. பவர் பத்திரத்தை ரத்து செய்த பிறகுதான் பின்தேதியிட்டு மோசடியாக கிரயை பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் அதற்கு நான் உடந்தையாக இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிராதில் தாவா சொத்தின் சுவாதீனம், அசல் ஆவணங்களை கிரய ஒப்பந்த தேதியில் பெற்றுக் கொண்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். என் பிரமாண வாக்குமூலத்தின் 3 ம் பத்தியில் தாவா சொத்தினை கையகப்படுத்திய தேதியில் இருந்து 3 வது பிரதிவாதி சுவாதீன அனுபவத்தில இருந்து வருகிறார் என்று சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். 3 முதல் 5 பிரதிவாதிகள் வெங்கடாஜலம், ஜெய்சிராணி ஆகியோரை தங்கள் நிலத்தை விற்க ஏஜெண்டா நியமணம் செய்ய அவசியம் ஏற்பட்டதில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் தான் பவர் ஏஜெண்ட்டாக நியமணம் செய்தார்கள். மேற்படி பவர் பத்திரம் மேற்படி பிரச்சினைக்காகத்தாக் எழுதப்பட்டது என்றும் சொத்துக்களை விற்பணை செய்ய பவர் பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் அக்ரிமெண்ட் உண்மையல்ல என்று சொல்லியுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 2 வது எதிருரை தாக்கல் செய்து வழக்கை தீர்ப்பாணை வழங்குவதில் ஆட்சேபனை இல்லை என்று முரணான பதில் தாக்கல் செய்தது தெரியுமா என்றால் தெரியாது. 1,2 பிரதிவாதிகளுடன் சேர்ந்துதான் வழக்கை நடத்தி வருவதால் அவர்கள் என்ன பதில் போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியும் என்றாலும் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்குண்டான அசல் ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஒப்பந்தத்தை மட்டும் தாக்கல் செய்துள்ளேன். பவர் பத்திரம் , மூல ஆவணங்களின் நகல் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கு சம்மந்தப்பட்ட எந்த மூல ஆவணங்களை நான் பெற்றேன் என்றால் அக்ரிமெண்ட், பவர் பத்திரம் , ரங்கநாதன் பெயரில் சொத்து இருந்ததற்கான அசல் ஆவணங்களை கொடுத்தார்கள். சாட்சி தற்போது ஜெராக்ஸ் தான் தந்தார்கள் என்று கூறுகிறார். 10.08.2001 ல் தாவா சொத்து முழுவதும் 5 ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகாவது மேற்படி சொத்து யார் பெயரில் பதியப்பட்டது என்பதை தெரிந்து கொள்ள முயற்சி செத்தேனா என்றால் இல்லை. மேற்படி சொத்து 2012 லேயே தாவா சொத்தின் மார்க்கெட் மதிப்பு ரூ.75 லட்சத்திற்கு மேல் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் அனுப்பிய

அறிவிப்பில் 01.04.2013 அன்று சார்பதிவாளர் அலுவலகத்தில் காத்திருந்தேன் என்று சொல்வதற்கு ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அறிவிப்பில் சொல்லியிருந்தேன். ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை. அக்ரிமெண்ட் தட்டச்சு செய்யும் போது நான் அங்கிருந்தேனா என்றால் இல்லை. அக்ரிமெண்ட் வாசகங்கள் யார் சொன்னார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எமரால்டு வெங்கடாஜலத்தின் கையாள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தலையிட்டு தீர்க்கும் அனைத்து பிரச்சினைகளுக்கும் நான் தான் தலையிட்டு சரிசெய்துள்ளேன் என்று சொன்னால் பொய்யாகும். நான் அன்றாட உணவுக்கு கஷ்டப்படும் நிலையில் உள்ளேன் என்றால் சரியல்ல. நான், ராஜேந்திரன், 1,2 பிரதிவாதிகள் ஆகியோர் கூட்டு சேர்ந்து கிரைய ஒப்பந்தம் தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் எவ்வளவு காலம் போடப்பட்டது என்றால் ஓராண்டு காலம் போடப்பட்டது. தாவா சொத்து 3 முதல் 5 பிரதிவாதிகள் தான் அப்போது சுவாதீனத்தில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. 2010ம் ஆண்டு முதலே 3 முதல் 6 பிரதிவாதிகள் நேரடியாகவே பல பத்திரங்களை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று நேரடியாக பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு நேரில் தெரியும் என்றால் தெரியாது. அவர்கள் சொத்தை பொறுத்து விற்ற கிரயங்கள் அனைத்தும் அக்ரிமெண்ட் போடாமல் நேரடியாக செய்யப்பட்டவை என்றும் அது பற்றி எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு நீதிமன்றம் கட்டணம் எவ்வளவு செலுத்தியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வெங்கடாஜலத்திற்கு தான் அது பற்றி தெரியும் என்றாலும் எமரால்டு வெங்கடாஜலம் சொல்லி நான் தாக்கல் செய்த காரணத்தினால் தான் நீதிமன்ற கட்டணம் பற்றி எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எமரால்டு வெங்கடாஜலம் சொல்லி பொய் வழக்கு நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/– PW1

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.